ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்க இலக்கியத்தில் மனித மாண்புகள்

1

**முனைவர் அ.ஜெஸிந்தாராணி**

**இணைப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,**

**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,திருச்சிராப்பள்ளி – 02**

**tamiljasintha@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககால மன்னர்கள் மக்களை ஒற்றுமைப்படுத்த அரும்பாடுபட்டனர். ஆன்றோரையும் ஆன்றவித்தடங்கிய கொள்கைச் சான்றோரையும் போற்றித் தாமும் அவர்கள் வழி நின்று அறநெறி காத்தனர். அன்றைய மன்னர்களும் மக்களுக்கும் இடையே நிலவிய உறவு நிலைபற்றி அக்கால இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

**திறவுச் சொற்கள்**

**கோ—அரசன் உலா-பவனி வருதல் ஈதல்-கொடுத்தல்**

**முன்னுரை**

சங்ககால இலக்கியங்களில் வீரமும் காதலும் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்வு சிறந்தோங்கி ஒருவருக்கொருவர் மனிதப் பண்போடு வாழும் நிலையினையும் அக்கால இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.

**சங்ககாலத்தில் துவங்கிய சரித்திரம் பொன்னேட்யைப்**
**புரட்டிப் பார்க்கின்ற போது நமக்கு ஏரளமான**
**கருத்துக்கள் மீட்டுருவாக்கமாக இதயத்தில்**
**உலா வருகிறது.**

**(இதயகீதம் இராமானுஜம்)**

என்று குறிப்பிடுகின்றார்.

அரசர்களும், புலவர்களும் மக்களும் ஒருவருக்கொருவர் பரிவும் பாசமும் காட்டினார்கள். இவர்கள் இணைக்கும் பாலமாக அன்பு அமைந்தது. மன்னர்களும் புலவர்களும் சிறந்த பண்பாளர்களாக நண்பர்களாக இருந்தனர். எடுத்துக்காட்டாகக் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பைக் கூறலாம். நல்லது செய்யுங்கள் இயலாது என்றால் தீமையாவது செய்யாமல் இருங்கள் அதுதான் மனித குலத்திற்கு நன்மையை விளைவிக்கும் எனும் கருத்தினைச் சங்கபாடல் உணர்த்துகிறது.

செல்வத்துப் பயனே ஈதல் என்று கூறுதல் செல்வம் உடையவரின் கடமை வறியவரின் வறுமையினைத் தீர்த்தலாகும் என்பதை வலியுறுத்துகிறது. வள்ளல்கள் எந்தவிதப் பயனையும் எதிர்பார்க்கமால் வருந்தி வந்தவர்களின் வறுமையினைப் போக்கப் பொருளை வாரி வழங்கினார்கள். அன்பும் அருளும் மனிதர்களிடம் மட்டும் அமையாது ஓரறிவுடைய முல்லைக் கொடி பற்றிப் படர்வதற்குத் தான் ஏறிவந்த தேரை ஈந்தவன் வேள் பாரி ஆவான். கார்காலம் கண்டு ஆடிய

ஐந்தறிவுடைய மயில் குளிரால் நடுங்குவதாகக் கருதித் தன் போர்வையை அளித்தவர் வள்ளல் பேகன் ஆவார். புலவர்கள் தாம் வறுமையுற்று வாடியபோதும் தம் புலமைக்குப் பரிசாக வள்ளல்களிடம் பெற்ற பொருளைச் சுற்றம் அருத்தியும் வறுமை உற்றோர்க்கு வாரி வழங்கியும் வந்தனர்.

**நின்னயந் துறை நர்க்கு தீதயத் துறைநர்க்கும்**
**பன்மான் கற்பினின் கிளை முதலோர்க்கும்**
**கடும்பின் கடும்பசி தீர யாழநின்**
**நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்** **(புறநானூறு)**

என்ற பெருஞ்சித்தரனாரின் பாடல் சங்ககால மக்களின் மனிதநேயப் பண்பினைப் புலப்படுத்துகிறது. சங்க இலக்கிங்கள் அனைத்துமே மக்களிடையே மனித நேய உணர்வை வளர்ப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன.

**அக இலக்கியத்தில் மனிதநேயம்:**

தலைவன் தலைவியரின் அகவாழ்க்கை நிகழ்வுகளை விரித்துரைக்கும் அக இலக்கியங்களில் மனித நல உணர்வு மேலோங்கி நிற்கிறது. ஆண்கள் தாங்கள் விரும்பிய தங்கள் வாழ்க்கைத் துணைவியைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையினையும் தங்கள் உழைப்பினால் கிடைத்த பொருளைக் கொண்டு வரதட்சனை வாங்காமல் மணம் புரிந்துகொள்ளும் சிறந்த உணர்வினையும் பெற்றிருந்த நிலையினைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. எனவே சங்ககால ஆண்கள் மனிதநேய உணர்வினையும் பேதமிலா வாழ்க்கை நெறியினையும் அடைந்திருந்த நிலையினைக் கணிக்க முடிகிறது.

**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் துந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே**

**(குறுந்தொகை)**

என்னும் இப்பாடலில் இதற்குமுன் எவ்வகையிலும் ஒருவரையொருவர் பார்த்து அறிந்திராத தலைவனும் தலைவியும் செம்மண்ணில் பெய்த மழைநீர் அம்மண்ணின் நிறத்தை பெற்றதைப் போல ஒருமித்த காதல் கொண்டு இணைந்ததாகக் கூறுவது மனிதநேயம் காதலாக வளர்ந்ததைக் காட்டுகின்றது.

**இம்மை மாறி மறுமையாகினும் நீயாகியரென் கணவனே**
**யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே**

**(குறுந்தொகை)**

என்று கூறும் குறுந்தொகைத் தலைவியைக் காணும் போது கணவன் மீது அளவற்ற பாசமும் அன்பும் வைத்துள்ள சிறந்த பண்பாடுடைய தலைவியின் மனிதநேய மாண்பினைக் காட்டுகின்றது. இம்மனித நேயம் இப்பிறவிக்கு மட்டுமல்லாது மறுபிறப்பிலும் தொடர விரும்பும் ஆண், பெண் ஒற்றுமையின் உச்சநிலையைப் புலப்படுத்துகின்றன.

**இனக்கிளியாம் கடிந்து**
**ஓம்பும் புனத்து அயல்**

**(கலித்தொகை)**

என்ற பாடலடிகள் அக்கால மக்கள் ஆண்-பெண் பாகுபாடின்றி இருவரும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு ஏற்றம் பெற்ற நிலையினைக் காட்டுகின்றது. அகப்பொருள் இலக்கியங்கள் ஒருமைப்பாட்டுணர்வுக்குச் சிறப்பிடம் தருகின்றன.

**யவனர் தந்த வினைமான் தன்கலம்**
**பொன்னொடு வந்து கூறியொடு பெயரும்**

**(அகநானூறு)**

என்ற பாடலில் யவனர்கள் மரக்கலங்களில் பொன்னை ஏற்றி வந்து அதற்குப் பதிலாக மிளகை ஏற்றிச் செல்லும் காட்சியைக் காணமுடிகிறது. இக்காட்சி வணிகவாழ்வில் பொருளின் விலைமதிப்பை பெரிதாகக் கொள்ளாத மனிதநேய உணர்வோடும் ஒருமைப்பாட்டுணர்வோடும் அண்டை அயல் நாடுகளோடு பொருளாதாரத் தொடர்புகள் வைத்திருந்த சங்ககாலச் சமுதாய நிலைக்குச் சான்றாகும்

**புற இலக்கியங்களில் மனிதநேயம் :**

மனிதத் தன்மை வாய்ந்த நல்லதொரு சமுதாயத்தைப் புறப்பாடல்கள் வழிக்காண முடிகின்றது. அரசர்கள் பகைவரும் புகமும் வண்ணம் உயர்ந்த முறையில் ஆட்சி செய்தனர். ஒற்றுமையின் உயர்வை உணர்ந்து கூட்டாச்ணசியில் நம்பிக்கை கொண்டனர். அறிஞர்கள் புலவர்களின் சொற்களுக்கு மதிப்புக் கொடுத்தனர் ஐம்பெருங்குழு எண்பேராயும் போன்ற குழுவினரைத் தம் ஆட்சிமுறை நன்கு அமையத் தேர்ந்தெடுத்து வைத்திருந்தனர். புகழுக்காக உயிரையும் கொடுக்கச் சித்தமாய் இருந்தனர் ஆனால் உலகையே பரிசாகப் பெறுவதாக இருந்தாலும் அதனால் பழி வருமெனில் அச்செயலைச் செய்யாதிருந்தனர்.

**இமயத்துக் கோடுயர்ந்தன்ன தன் இசை நட்டுத்**
**தீதில் யாக்கையொரு மாய்தல் தவத் தலையே**

**(புறநானூறு)**

என்பதே அவர்தம் கொள்கையாக இருந்தது. இன்றைய அமைதியற்ற போர் உலகில் தாரக மந்திரமாக விளங்குகின்றன.

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோரன்ன**
**சாதலும் புதுவது அன்றே! வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்றும் இலமே**

**(புறநானூறு)**

என்ற இப்பாடல் நம் தமிழ் மண்ணிலே பிறந்தது. உலக ஒருமைப்பாட்டையே தன் செய்யுளில் அடக்கிவிட்ட கணியன் பூங்குன்றனாரைச் சாரும் நல்ல செயல்கள் செய்ய இயலாவிட்டாலும் தீய செயல்களாவது செய்யாமல் இருக்க முயலுங்கள் அதுவே அனைவரும் பகழ்வதற்கும் நல் வழியிலே செல்வதற்கும் ஏற்ற வழியாகும் என்ற கருத்தை உணர்த்துகின்றன.

**நல்லது செய்தல் ஆற்றீராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லோரும் உவப்பது அன்றியும்**
**நல்லாற்றுப் படுஉம் நெறியுமார் அதுவே**

**(புறநானூறு)**

என்ற பாடலடிகள் மனிதனின் அடிப்படைத் தகுதியை வரையறுக்கின்றன பொருளாதாரச் சீர்திருத்ததிற்காகப் பல கொள்கைகள் இன்று அரசுகளால் கடைப்பிடிக்கப்படுகின்றன. சங்ககாலப் புலவர்கள் பொருளாதார நிலை பொலிவுற்றுத் திகழ்வதற்காக அரசனுக்கே அறிவுரை கூறும் திறமையும் தகுதியும் பெற்றிருந்தனர்

**காய் நெல்லுறுத்துக் கவளங் கொளினே**
**மாநிறை வில்லதும் பன் நாட்காகும்**
**நூறுசெறு வாயினும் தனித்துப் புக்குனினே**
**வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்**

**(பறநானூறு)**

**என்பதோடு அரசனை வாழ்த்திப் பாடும் புலவர்.**

**அங்கன் விசும்பின் ஆரிருள் அகற்றும்**
**வெங்கதிர்ச் செல்வன் போலவும் திசைத்**
**தண் கதிர் மதியம் போலவும்**
**நின்று திலை இயர் உலகமோடு உடனே**

**(புறநானூறு)**

என்ற இப்பாடலின் மூலம் வானத்து இருள் நீக்கும் வெங்கதிர் ஞாயிற்றைப் போலவும் மேற்குத் திசையிலே விளங்கும் குளிர்ந்த நிலவு போலவும் உலகம் உள்ளளவும் நிலைபெற்று வாழ்வாயாக என்று வாழ்த்தி மனிதநேய உணர்வு மன்னனுக்கு வேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றார் பிறர்க்குத் கொடுத்து மகிழும் ஈகைப் பண்பே செல்வ வளமுடையோரின் சிறந்த பண்பாகும் என்று கூறப்படுகின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. இராமானுஜம் இலக்கியத்தில் மனிதநேயம் ப-10
2. புறநானூறு பா எண் - 163
3. குறுந்தொகை பா எண் - 40
4. கலித்தொகை பா எண் - 37
5. அகநானூறு பா எண் - 149
6. புறநானூறு பா எண் - 214
7. புறநானூறு பா எண் - 192
8. புறநானூறு பா எண் - 195
9. புறநானூறு பா எண் - 184
10. புறநானூறு பா எண் - 56

**பார்வை நூல்கள்**

முனைவர் இரா. மோகன் சங்க இலக்கியம்
பத்துப்பாட்டு தொகுதி 1
திருவள்ளுவர் கணிப்பொறி அச்சகம்
தஞ்சாவூர் 07.
(முதல் பதிப்பு – ஏப்ரல் 2004)

முனைவர் வி. நாகராசன் சங்க இலக்கியம்
பத்துப்பாட்டு தொகுதி 2 நியூ செஞ்சுரி
புக்ஹவுஸ் அம்பத்தூர் சென்னை 98.
(முதல் பதிப்பு ஏப்ரல் 2004).